ஆசிரியர்களாக தகுதி பெறுவதற்கு வேண்டிய பயிற்சி அளிக்கப் பட்டு அவர்கள் தகுதி பெற்றவர்களாக ஆக்கப்படுவார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, இந்த 'கண்டென்ஸ்ட் கோர்ஸ்'-ல் படித்து வரும் பெண்கள், செகண்டரி கிரேட் கோர்ஸ்களில் சேரவேண்டும் என்றால் மார்க் போதுமான அளவு வரவில்லை என்பதற்காக அவர்கள் சேர முடியாமல் இருக் கிறது. ஒன்று, அவர்களுக்கென்று தனியாக, பெண்கள் படிக்க செகண்டரி கிரேட் டிரைனிங் சென்டர் வைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ? அப்படி இல்லையென்றால் அவர்களுக்கு இத்தனை சத விகிதம் இடங்கள் என்று ஒதுக்க அமைச்சர் வழிவகை செய் வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதற்கு தனிக் கேள்வி வேண்டும்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : எற்கெனவே ஹரிஜனங்கள் பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. 'பெயில்' ஆனாலும்கூட ஓரளவு மார்க் வாங்கினால் செகண்டரி கிரேடுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி அந்த அனுமதி இருக்காதா என்று அமைச்சர் தெரிவிப்பாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்போது இருக்கிற அனுமதி இருக்காது என்று நான் சொல்லவில்லை.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஹையர் கிரேட் ஆசிரியர்களை செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக மாற்றுவதற்கு பயிற்சி அளிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்கள். பயிற்சி பெற்றபின் இந்த செகண்டரி கிரேட் ஆசிரியர்களின் சம்பளம் எந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : செகண்டரி கிரேட் ஆசிரியர் களுக்கு உரிய சம்பளம் இவர்களுக்கு கொடுக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்: ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கிற பள்ளிகளிலே, இடம் கிடைக்க ரொம்ப சிரமம் இருக்கிறதே, அதைப் போக்க இப்போதுள்ள இடங்களை அதிகரித்து சலுகை களைக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: எவ்வளவு தேவை இருக்கிறதோ, அதற்குத் தகுந்தவாறு பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

சட்டப்பேரவைகளின் உரிமை பற்றி தலைமை நீதிமன்றத்தின் கருத்து

* 325 **கேள்வி.—திரு. செ. மாதவன் :**
திரு. எம். எஸ். செல்வராஜன் : } கனம் முதல்

அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சட்டமன்றங் களுக்குத் தரப்பட்டுள்ள உரிமைகள் பற்றி இந்தியத் தலைமை

25th March 1965]

நீதிமன்றம் பரிசிலனை செய்யும்போது சென்னை அரசாங்கமும் நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், நமது அரசாங்கத்தின் சார்பாக தலைமை நீதிமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் யாவை ?

(உ) சட்டமன்றத்தின் உரிமைகள் பற்றி தலைமை நீதிமன்றம் அண்மையில் தெரிவித்த கருத்துக்களை அரசாங்கம் பரிசீலித்ததா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM—

(a) No, Sir.

(b) Does not arise.

(c) The opinion of the Supreme Court is being examined in consultation with the Advocate-General.

திரு. கே. ஏ. மதியழகன் : சட்டமன்றங்கள் முழு அதிகாரம் உள்ள மன்றங்களாக இருக்கவேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறதா ? அல்லது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்பளித்துள்ளபடி உயர் நீதிமன்றங்கள் சில வரம்புக்குட்பட்டு தலையிடலாம் என்ற கருத்தை அரசாங்கம் கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கம் புதிதாக ஒன்றும் கருத்து கொள்ளவில்லை. சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பை அட்வகேட்-ஜெனரலுக்கு அனுப்பி அவர்களின் கருத்து கோரப் பட்டிருக்கிறது. அதற்குமேல் என்ன செய்யவேண்டுமென்று அரசாங்கம் யோசனை செய்யும். கனம் அங்கத்தினர்களும் கருத்து இருந்தால் தெரிவிக்கலாம்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உரிமை பற்றி அரசியல் சாசன சட்டத்தை திருத்த, மத்திய சர்க்கார் இந்த மாநில சர்க்காரை கலந்து ஆலோசனை கேட்டதா? அப்படி என்றால் என்ன யோசனை சொல்லப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றும் இல்லை.

SRI V. KRISHNAMOORTHY : Sir, are the Government aware of the fact that even the decision given by the Supreme Court recently, gives the same powers as are already enjoyed by the Legislature and they allow the High Court to remand or convict a person and send him to jail in accordance with its decision?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பு தெரிவித்தபடி சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின்பேரில் அட்வகேட்-ஜெனரலின் அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்பின் விளைவாக சட்டசபை செய்யக்கூடிய முடிவை எதிர்த்து இப்பொழுது கோர்ட்டுக்கு போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறதா, இல்லையா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்புகூறிய விடையைத் தான் கூற வேண்டும். அட்வகேட்-ஜெனரலின் அபிப்பிராயத்தை கோரியிருக்கிறோம். அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பது அட்வகேட்-ஜெனரல் கூறும் கருத்தைப் பொறுத்தது.

Loan to cashew cultivators

* 326 Q.—Sri K. NARAYANASWAMI PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state the amount distributed as loan to the cultivators of cashewnut in the State during 1964?

The Hon. Sri P. KAKKAN : The total amount of loan disbursed to cashew cultivators in this State during the period from 1st April to 31st December 1964 was Rs. 3,19,740.

இம் மாநிலத்தில் 1-4-1964 முதல் 31-12-1964 வரையில் முந்திரி பயிரிடுபவர்களுக்கு வழங்கிய மொத்தக் கடன் தொகை ரூ. 3,19,740 ஆகும்.

திரு. ஆ. கு. சுப்பையா : மாவட்ட வாரியாக அமைச்சர் விவரம் கூறுவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : மாவட்ட வாரியாக விவரம் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, முந்திரி பயிரிடுவதற்கு கொடுக்கப்படும் கடன் எத்தனை ஆண்டுகளுக்குள் வசூலிக்கப்படும் ? வட்டி விகிதம் என்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : வட்டி விகிதம் 5½ சதவிகிதம். 6-வது வருடத்திலிருந்து கடன் திருப்பி கொடுப்பது ஆரம்பம் ஆகும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : முந்திரி பயிரிடுவதற்கு கடன் கொடுப்பது போல, பலா பயிரிடுவதற்கும் கடன் கொடுக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. சா. கணேசன் : ஆறுவது வருஷத்திலிருந்து கடன் திருப்பிக் கொடுப்பது ஆரம்பம் ஆகும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 6-வது வருஷம் ஆரம்பம் என்றால், எத்தனை வருஷங்களில், எத்தனை தவணைகளில் தீர்க்கப் பெற வேண்டும் ?

கனம் திரு. பூ. கக்கன்: அந்தத் தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, அளிக்கப்படுகிற கடன் சரியாக பயன்படுத்தப்படுகிறதா என்று அறிய என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்காக விவசாய இலாகா அதிகாரிகள் முந்திரி பயிரிடப்படுகிறதா, இல்லையா, அந்தந்த பிராந்தியங்களிலே நன்றாக பயன்படுத்தப்படுகிறதா, கொடுத்த கடன் நல்ல முறையிலே உபயோகப்படுத்தப்படுகிறதா என்று பார்த்துக் கொண்டுவருகிறார்கள்.